Justiz- und Sicherheitsdepartement des Kantons Basel-Stadt

# வீட்டு வன்முறைக்கு எதிரான கற்றல் திட்டம் –

## பாசெல் ஸ்டாட் ஆண் பெண்களுக்கான வழங்கல்
## குடும்பத்திலும் இணையர்கள் உறவிலும்
## வன்முறை அற்ற வாழ்க்கைக்கு உரியது



# உங்களுக்கு இது தெரியுமா?

உங்கள் துணைவனுடன், துணைவியுடன் அல்லது பிள்ளைகளுடன் வாதிடும்போது...

... நீங்கள் அச்சம் கொள்கின்றீர்கள், உங்கள் மீதான கட்டுப்பாட்டை இழப்பதாகவும் மற்றும் அனைத்தும் அதிகமாகிவிட்டதாகவும் உணர்கின்றீர்கள்.
... நீங்கள் கூச்சலிட்டிருக்கிறீர்களா, அவமதித்திருக்கிறீர்களா அல்லது அச்சுறுத்தி-னீர்களா.
... நீங்கள் தள்ளிவிட்டீர்களா மோதினீர்களா, எச்சில் உமிழ்ந்தீர்களா, அடித்தீர்களா, நெரித்தீர்களா அல்லது இவற்றை செய்யவேண்டிவரும் என அச்சப்பட்டீர்களா.
... நீங்கள் பொருட்களை சேதப்படுத்தினீர்களா அல்லது அடுத்தவர்கள்மீது எறிந்து-விட்டீர்களா.
... சூழ உள்ளோர் உங்களுடன் அச்ச உணர்வுடன் நடந்துகொள்வதை உணர்கிண்றீர்களா.

இங்கு குறிப்பிடப்பட்ட புள்ளியில் ஏதேனும் ஒன்று மட்டும் பொருந்தினாலும்: அதனை மிகச்சீரிய பொருளாகக் கொள்ளுங்கள். உங்கள் அன்புக்குரியவர்களை பாதுகாத்துக்கொள்ளுங்கள்! வன்முறையால் அனைவரும் பாதிக்கப்படுகின்றா-ர்கள், குறிப்பாக குழந்தைகள், இத்தகைய வன்முறையை அவர்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக எதிர்கொள்ளும்போது. குடும்ப வன்முறை குழந்தைகளின் வளர்ச்சியில் பெரும் சுமையை ஏற்படுத்துகின்றது.

# வன்முறையற்ற எதிர்காலத்தை நோக்கி உங்கள் முதல் அடியை எடுத்துவையுங்கள்!

குடும்ப வன்முறை கற்றல் திட்டத்தில் நீங்கள் பங்கெடுத்துக்கொள்ளுங்கள். இதன் விளைவு உணரக்கூடியதாக இருக்கும்:இக்கற்றல்  திட்டத்தில் பங்கேற்பவர்கள் மீள்பின்னடைவு எதிர்கொள்ளும் வாய்ப்புக்கள் குறைவு. இக்கற்றல் பங்கேற்பா-ளர்கள் தங்கள் வன்முறைக்கு என்ன காரணம், அதைத் தூண்டுவது எது, அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பதைக் கற்றறிவார்கள்.
வீட்டு வன்முறைத் துறையில் பல வருட பட்டறிவு உள்ள திறவோர்களால் பாடநெறி நடத்தப்படுகிறது.

# இக்கற்றல் திட்டத்தில் யார் பங்கேற்கலாம்?

இக்கற்றல் திட்டம் தற்போது இணையாக வாழ்வோருக்கும், இணைவாழ்வு முறித்துக்கொண்ட வயதுவந்தவர்களுக்கும் அல்லது குடும்பத்தில் வன்முறையில் ஈடுபட்ட அல்லது வன்முறை அச்சுறுத்தல் விடுப்போரையும் நோக்காகக் கொண்டுள்ளது.

இக்கற்றலிற்கு விண்ணப்பித்த பின்னர், பாடநெறி வழங்குநருடன் ஒரு வகுப்புச்சேர்க்கை நேர்காணல் நடைபெறும். பிறமொழி பங்கேற்பாளர்களுக்கு மொழிபெயர்ப்பு ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். இவ்வழங்கல் வாய்ப்பு கட்டணம-ற்றது.

# இக்கற்றல் திட்டத்தின் நோக்கங்கள் என்ன?

- உங்களது சொந்த வன்முறை இயக்கவியல் வடிவத்தை நீங்கள் இனம்கண்டுகொள்வீர்கள்.
- நீங்கள் மீள்பின்னடைவு அபாயத்தை அறிவீர்கள், தடுப்பதற்கான உத்திகளை உருவாக்குவீர்கள்.
- நீங்கள் வன்முறை அற்ற வழியில் வாதிடவும் உரையாடவும் கற்றுக்கொள்வீர்கள்.
- நீங்கள் சுய விழிப்புணர்வையும் பிறர் புலனறிவையும் ஊக்குவிப்பீர்கள்.
- நீங்கள் புதிதாகப் பெற்ற திறன்கள் ஊடாக பாதுகாப்பினைப் பெறுவீர்கள்.

# விண்ணப்பிக்க:

கற்றல் சேர்க்கை நேர்காணல் ஏற்பாடு செய்ய, தயவுசெய்து தொடர்பு கொள்ளவும்:

Abteilung Gewaltschutz und Opferhilfe
தொலைபேசி:  +41 (0)61 267 44 90
மின்னஞ்சல்: haeusliche-gewalt@jsd.bs.ch

கற்றல் திட்டத்திற்கு ஒரு நபரைப் பதிவு செய்யும் அதிகாரிகள், வன்முறை பாதுகாப்பு மற்றும் பாதிக்கப்பட்டோர் உதவித் துறைக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் அனுப்புவார்கள் (Abteilung Gewaltschutz und Opferhilfe).

## வெளியிடுவோர்:

**Justiz- und Sicherheitsdepartement Basel-Stadt**
Generalsekretariat
Abteilung Gewaltschutz und Opferhilfe
Spiegelgasse 6, 4001 Basel
www.halt-gewalt.bs.ch

பதிப்பு மற்றும் தளவடிவமைப்பு: bom! communication ag
© 2023